1990 மே 12]

ஒரு கேள்வியையும் கேட்டு, 'புரட்டக்டட் ஏரியா' என்று ''ஃபாரஸ்ட் ஏரியா''க்களை 'டிக்ளேர்' செய்யுமா அரசாங்கம் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம், 'புரட்டக்டட் ஏரியா' என்று சொல்வோமேயானால், யாரும் உள்ளே நுழைய முடியாது; எந்த வாகனமும் வர முடியாது. ஏர்போர்ட், பாலங்கள் போன்ற பெரிய பெரிய முக்கியமான இடங்களைப் பாதுகாப்பது போல.

9-15 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'ரிசர்வ் ஃபாரஸ்ட்' என்றுதான் இருக்கிறது. 'ரிசர்வ்' என்றாலே ஏறத்தாழ 'புரட்டக்டட்' என்றுதான் அர்த்தம். அது தவிர, வன விலங்குகள் காப்பகம், இவையெல்லாம் 'புரட்டக்டட் ஏரியா'வாகத்தான் இருக்கின்றன. ஆனால் எம்.ஜி. ஆருடைய ஆட்சியிலேதான் ஆங்காங்கே இருக்கக் கூடிய வனக் காப்பகத்தினுடைய அருகிலே இருக்கக் கூடிய தாய்மார்கள், பெண்கள் உள்ளே சென்று, காட்டுக்குள்ளே சென்று, தலைச் சுமையாக, விறகுகளை எடுத்து வருவதற்கு அனுமதி தரப் பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ரேஞ்சர்களுக்கு வயர்லெஸ் வழங்கப்பட்டிருக்கின்றன? அதே நேரத்தில், லாரி, மாட்டு வண்டி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும்.

ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தக் கட்டிடம்

*1839 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஜோலார் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமாகப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜோலார் பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் கட்ட சக்கனாக்குப்பம் கிராமத்தில் பணியிடம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையிலிருந்து நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், ஜோலார்பேட்டை ஒன்றிய அலுவலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தல சாலை மான்யம்

*4958 திரு. கே. ரவி. அருணன் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசால் வழங்கப்பட்டு வரும் தல சாலை மான்யத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நபர் ஒன்றுக்கு எவ்வளவு உயர்த்தப் படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப் பட்டு வரும் தல சாலை மானியத்தை உயர்த்தும் கருத்துரு, வல்லுநர் குழு அறிக்கை பெறப்பட்டதும் ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் 'லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்ஸ்,' அங்கேயுள்ள சாலைப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத்தான் போதுமானதாக இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களிலே ஏறத்தாழ, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 75 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டர் என்று சாலைகள் இருக்கின்றன. ஒரு கிலோ மீட்டர் சாலையை அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் செல வாகிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்காக தல சாலை மானியத்தை உயர்த்துவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 131-வது பிரிவின்படி, ஏற்கெனவே இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையி லேயும், சாலைகள், சாதாரணச் சாலைகள் எல்லாவற்றையும்